முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1611

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**26.02.2024,** திங்கட்கிழமை

1. ஞான வேலிகொண்ட ஆறுமுக அரங்கனே
ஞானிகள் துணைகொண்ட ஞான தேசிகனே
வானவர்கள் மெச்சி உன்பால்
வல்லமையோடு துணைநிற்க தர்மம் அருளுகின்ற
2. அருளுகின்ற குருராஜனே அரங்கனே
அகிலமதில் உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
வரமென ஞான அறிவுரை ஆசி
வழங்குவேன் சோபகிருது சால் திங்கள் தன்னில்
(சோபகிருது வருடம் மாசி மாதம் 14 ம் நாள், 26.02.2024, திங்கட்கிழமை)
3. தன்னிலே அரங்கனோடு ஆறுமுகன் யான்
தக்கபடி உடனிருந்து அற்புதம் நடத்துகின்றேன்
மண்ணுலகம் நல்ல மாண்பையும் மகத்துவம் மிக்க மக்களையும் அடைய
இன்பமுற எங்கும் அமைதி பாதுகாப்பு எல்லையில்லாத ஞானஆட்சி நிகழவும்
4. நிகழவும் அரங்கன் அவதாரத்தின் நீதி நெறிகுன்றாத வண்ணம்
நிலவுலகம் தர்ம சக்தியோடு வாழ
பெருமைபட அன்னதான கிளைகள்
பேருலகில் அரங்கன் தொண்டர்களாக உருவாக்கி இனிதே
5. இனிதே தர்மத்தை வளர்க்கின்றேன்
எங்கும் சுத்த சைவ நெறிபட
கனிவேலவன் யானே முன்னின்று வழிநடத்த
கருணையோடு தொண்டுகளை வளர்க்கின்றேன்
6. வளர்க்கின்ற இந்த சேவையின் மூலமாக
வையகத்தில ஒரு மாற்றம் நிகழக்கூடும்
தளர்வின்றி அனைவரும் ஞானிகளாக
தவசி அரங்கன் வழிகாட்டல் மூலமாக

7. ஆகவே உலகமாற்றம் நிகழ்த்த
அரங்கன் மகா ஞானப்படைகளாக உருவாகி
மிகைபட சடுதி மாற்றத்தை
மேலான உலகமாற்றமாக நிகழ்த்தி

8. நிகழ்த்தி ஞான ஆட்சி
நிலவுலகம் தானாய் நடந்தேற
அகிலமதில் ஆறுமுகன் அருள்புரிவேன்
அருளிய ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—